விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சுடர் 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 27 புதன்கிழமை (13.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒளி 349

ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# பொதுமக்கள் மீதான தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனம்

## இராணுவம் மற்றும் புலிகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

அப்பாவிப் பொதுமக்கள் மீதான கடுமையான எறிகணைத் தாக்குதலை நிறுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

பொதுமக்களைத் தாக்குவது மனித உரிமைகளை மீறுவதாகும் என இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படைக்குச் சொந்தமான பயணிகள் விமானம் விபத்தானது

(கொழும்பு)

விமானப் படைக்குச் சொந்தமான பய ணிகள் விமானம் ஒன்று நேற்று முன்தினம் மாலை இரத்மலானை விமான நிலையத் தில் விபத்துக்குள்ளானதையடுத்து அவ் விமானம் சேதமாகியுள்ளது.

திங்கள் மாலை 6.30 மணியளவில் பாதுகாப்புப் படையினரை ஏற்றிக்கொண்டு பலாலி விமான நிலையம் நோக்கி புறப்பட் டுக்கொண்டிருந்த வேளை மேற்படி விமா னம் ஓடுபாதையை விட்டு விலகி விபத்துக் குள்ளாகியதாக விமானப்படை தலைமை யகத்தின் அதிகாரியான குரூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ் விபத்தின் போது விமானத்தில் பய ணித்த படையினர் எவருக்கும் எந்த விதமான காயங்களும் ஏற்படவில்லை. விமானத்திற்கு மட்டுமே சேதம் ஏற்பட்டதாக குரூப் கப்டன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த நேரத்தில் பயணிக்க விருந்த அவ் விமானம் சம்பவ தினம் தனது பயணத்தை மேற்கொள்ள வில்லை என தெரிவிக்கப்பட்டது. (ஏ-1)

## வட பகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு தமிழகத்தில் உணவு,மருந்து சேகரிப்பு

### டிசம்பர் 15 முதல் பணிகள் ஆரம்பம்

(சென்னை)

இலங்கையில் பட்டினியால் வாடும் தமிழ் மக்களுக்கு உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் என்பவற்றைச் சேரிக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை தமிழகம் எங்கும் நடத்துவது என்றும் சேகரிக்கப்பட்ட பொருள்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பி வைப்பது என்றும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு முடிபு

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டம் சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்தில் 80 அதிகமான அமைப்புக்கள் கலந்து கொண்டன. இதன்போது இந்த முடிபு எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஏ-9 வீதி மூடப்பட்டதன் விளைவாக சுமார் ஆறு இலட்சம் தமிழ் மக்கள் உணவு ,மருத்துவ வசதி இன்றி பாதிக்கும் நிலை குறித்தும் இங்கு கண்டனத்

## யாழ்.குடாநாட்டுக்கும் வாகரைக்கும் உணவுப் பொருட்களை அனுப்ப வேண்டும்

### இராதாகிருஷ்ணன் வேண்டுகோள்

(கொழும்பு)

மனிதாபிமான அடிப்படையில் வாகரைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் உணவுப் பொருட்களை அரசாங்கம் அனுப்ப வேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட

தட்டுப்பாடும் நிலவுகின்றது. இந்த மனிதாபிமான பிரச்சினைக்கு உடனடியாக அரசாங்கத்தால் தீர்வுகாண வேண்டுமென மலையக மக்கள் முன்னணி கேட்டுக்கொள்கிறது.

மேற்படி பாதைகள் திறக்கப்படவேண்டு

துவது என்றும் சேகரிக்கப்பட்ட பொருள்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பி வைப்பது என்றும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஏ-9 வீதி மூடப்பட்டதன் விளைவாக சுமார் ஆறு இலட்சம் தமிழ் மக்கள் உணவு ,மருத்துவ வசதி இன்றி பரிதவிக்கும் நிலை குறித்தும் இங்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-5)

மனிதாபிமான அடிப்படையில வாகரைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் உணவுப் பொருட்களை அரசாங்கம் அனுப்ப வேண்டுமென மலையமக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரதியமைச்சருமான இராதா கிருஷ்ணன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாகரையில் ஷெல் தாக்குதலினால் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து பிரதியமைச்சர் ஷெல் தாக்குதலை இராணுவத்தினர் நிறுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதியமைச்சர் இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளதாவது, ஏ-9, ஏ-15 பாதைகள் மூடப்பட்டமையால் யாழ்ப்பாணத்தில் 6 இலட்சம் மக்களும் வாகரையில் 50 ஆயிரம் மக்களும் பட்டினியை எதிர் நோக்கியுள்ளனர்.

அங்கு உணவுப் பொருட்களின் விலைகள் பல மடங்குகளாக அதிகரித்துள்ளன.

மான பிரச்சினைக்கு உடனடியாக அரசாங்கத்தால் தீர்வுகாண வேண்டுமென மலையமக்கள் முன்னணி கேட்டுக்கொள்கிறது.

மேற்படி பாதைகள் திறக்கப்படவேண்டுமென இணைத்தலைமை நாடுகளும் வேண்டுகோள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் கான்ஸ்டபிள் மீது நேற்று துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

உதயன் பத்திரிகை அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் மீது நேற்றுக் காலை 10.45 மணியளவில் இனந்தெரியாதோரால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் சிகிச்சைக்காக யாழ்.போதனா (04 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக்கட்சிக் கூட்டத்திலிருந்து மக்கள் விடுதலை முன்னணி விலகல்

இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாணும் 17 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கையை எதிர்க்கும் வகையில் அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் இருந்து ஜே.வி.பி.விலகிக் கொள்வதாக நேற்று அறிவித்துள்ளது.

ஜே.வி.பி.கட்சியின் தலைவர் சோமவன்ச அமர சிங்க ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை அறிவித்தார். இதேவேளை கூட்டத்தில் இருந்து விலக வேண்டாம் என ஜே.வி.பியைக் கேட்டுக்கொள்ளப்போவதாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் தலைவர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

இவ் வேளையில் நிபுணர் குழுவின் ஆய்வறிக்கையை விடுதலைப்புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கவேண்டுமென புதிய இடதுசாரிக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண கேட்டுள்ளார். (எ-5,133)

## மட்டு., வாகரைப் பகுதியில் நேற்று விமானத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை கட்டுமுறிவு, கதிரவெளி, பாற்சேனை ஆகிய கிராமங்களின் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது கிபீர் விமானங்கள் நேற்று முற்பகல் 10 மணியளவில் தாக்குதலை நடத்தியுள்ளன.

விமானங்கள் எட்டு குண்டுகளை இப் பகுதிகளில் போட்டதாக அறியப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப்புலிகள் வசமுள்ள இந்தப் பகுதிகள் மீது வான்படை நடத்திய தாக்குதலில் நான்கு வீடுகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

அதிர்ஷ்டவசமாக பொதுமக்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவத்தின் பீரங்கி மற்றும் உந்துகணைத் தாக்குதல்களில் இருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கதிரவெளி, பாற்சேனை, வம்மிவெட்டுவான், கண்டலடி ஆகிய பகுதிகளில் இருந்து கடந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வைத்தியசாலை பணியாளர் உடுப்பிட்டியில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் எழுது வினைஞராக கடமைபுரியும் ஒருவர் நேற்றுக் காலை அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக் கொல்லப்பட்டவர் உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த சமாதான நீதிவானான பரஞ்சோதி ஆனந்தகுமார் (வயது 47) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் அவரது வீட்டில் தொலைத் தொடர்பு நிலையம் நடாத்திவருவதாகவும் நேற்றுக் காலை 6 மணியளவில் தொலைபேசி அழைப்பு எடுப்பவர் போன்று சென்ற ஒருவர் அவரை சுட்டுவிட்டுத்தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலத்தை மந்திகை மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பதில் நீதிவான் சபா.இரவீந்திரன் பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-9,52,10)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## யூரியா விநியோகத்தில் முறைகேடு காரைநகர் விவசாயிகள் கவலை

(காரைநகர்)

காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தில் மானிய விலையில் உரம்(யூரியா) விநியோகிக்கப்பட்ட போதும் விவசாயிகளிற்கான பங்கீட்டு அடிப்படையிலான விநியோகம் சீரற்ற முறையில் இடம்பெற்றுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகர் விவசாயிகளுக்கென இரு கட்டமாக சுமார் 450றக்கும் மேற்பட்ட யூரியா மூடைகள் கமநல சேவைகள் நிலையத்துக்கு கிடைத்த போதிலும் அதில் குறிப்பிட்ட தலா 10 கிலோ மட்டும் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் பங்கீட்டு அடிப்படையில் பரப்பிற்கு ஒரு கிலோ வீதம் விவசாயிகளுக்கு வழங்கிய அதே நாளில் மாலை 5 மணிக்குப் பின் பற்றுச்சீட்டு எதுவும் வழங்காமல் மூடையாக விநியோகித்ததாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இச் சீரற்ற உர விநியோகம் தொடர்பாக காரைநகர் உதவி அரச அதிபரிடம் முறையிட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை காரைநகரில் அண்மைக் காலமாக தட்டுப்பாடாகவிருந்த உரம் தற்பொழுது கள்ளச்சந்தையில் ஒருகிலோ 20 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-246)

## ஆய்வறிக்கையினை வெளியிட்ட நிபுணர் குழுமீது ஜனாதிபதி பாய்ச்சல்

(கொழும்பு)

தமது அதிகாரத்தை மீறி இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆய்வறிக்கையை ஊடகத்துக்கு வெளியிட்டதால் அனைத்துக் கட்சி நிபுணர் குழு மீது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆத்திரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜாதிக ஹெலஉறுமயக் கட்சி கடந்த வெள்ளிக்கிழமை மகிந்தவுடன் அவசர கூட்டம் நடத்தியது.நிபுணர் குழுவினரது நான்கு ஆய்வறிக்கைகளில் ஒன்று அக்கட்சியின் அனைத்துக் கட்சியின் பிரதிநிதித்துவக் குழுவிடம் முன்னரே கொடுக்கப்பட்டிருந்தது.

எனவே அறிக்கையை அரசாங்கத்தினுடையதுதானா? என ஜாதிக உறுமய கேள்வி எழுப்பியுள்ளது.

நான்கு அறிக்கைகளும் பரிசீலனைக்கு உரியவை. அரசாங்கத்தின்அறிக்கைஅல்ல என ஜனாதிபதிஅதற்குப் பதிலளித்தார். வெவ்வேறு அறிக்கைகளின் விபரங்களை ஊடகப் பிரிவிடம் வெளியிட்டு குழப்பத்தையும் அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்த தவறான புரிந்துணர்வையும் ஏற்படுத்தியதற்கு நிபுணர் குழுவே காரணம் என அவர் தெரிவித்தார்.

இது குறித்து அனைத்துக் கட்சிக் குழுத் தலைவர் திஸ்ஸ விதாரணவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மிகிந்த ராஜபக்ஷ விளக்கம் கேட்டுள்ளார். குழுவின் அறிக்கையைத் தவறாகக் குறிப்பிட்டு எழுதியதாக ஊடகங்களை குற்றஞ்சாட்டி தகவல் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது. (எ-1)

## மன்னாரில் கிளைமோர் சிப்பாய் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் சிக்கண்டல் பகுதியில் நேற்றுக் காலை கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தக் கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.இச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாகத் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் இரு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்காகக் கொண்டு இந்தக் கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-9)

## அனைத்துக் கட்சிக் குழுவின் யோசனைகள் விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்

### இடதுசாரிகள் முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

அனைத்துக் கட்சி நிபுணர் குழுவின் பெரும்பாலான உறுப்பினர்களின் யோசனைகளை விடுதலைப்புலிகளிடம் சமர்பிக்க வேண்டுமென இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்து வெளியிட்டஅவர், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இக்குழுவின் யோசனைகளை பேச்சுவார்த்தை மேசையிலாவது அரசாங்கம் முன்வைக்க வேண்டுமெனக் கோரியுள்ளார்.

அவ்வாறு செய்யப்படாவிட்டால் ஜனாதிபதி தாம் நியமித்த குழுவில் தமக்கே நம்பிக்கையில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிப்பார் எனக் கருதவேண்டியிருக்குமென அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நிபுணர்களின் யோசனையில் சமஷ்டி முறையிலான தீர்வுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இது வரவேற்கக் கூடியவை. எனவே ஜனாதிபதி தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு யுத்தத்தை நிறுத்த ஏ-9 வீதியைத் திறந்து சமாதானத்துக்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டு என விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்திருக்கின்றார். (ச-133)

## கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் மோதல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் சிக்கி ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர் 50 வயது மதிக்கத்தக்க ஒருவரெனத் தெரிவிக்கப்பட்டது. அவரின் சடலம் அடையாளம் காணும் பொருட்டு அன்றிரவே பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-133)

## நலன்புரி முகாம்களிலுள்ளவர்களுக்கு யப்பான் அரசாங்கம் பொருள் உதவி

(கொழும்பு)

நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கென யப்பான் அரசாங்கம் மேலும் ஒரு தொகுதிப் பொருட்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

54 லட்சம் ரூபா பெறுமதியான இப் பொருட்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டிருப்பதாக தேச நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சு செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க தெரிவித்தார்.

பிளாஸ்டிக் பாய்கள், கூடாரங்கள், தண்ணீர்க் கொள்கலன்கள் உள்ளிட்ட பல பொருள்கள் அவற்றில் உள்ளடங்கியிருக்கின்றன.

இப்பொருள்கள் யாழ்ப்பாணம்,மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-133)

## குடாநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு 4322 தபால் பொதிகள் கையளிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை தபால் நிலையத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கும் வகையில் 4 ஆயிரத்து 322 தபால் பொதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை கையேற்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பெருந்தொகையான தபால் பொதிகள் கையேற்கப்பட்டுள்ள நிலையில் இவற்றை களஞ்சியப்படுத்துவதற்கான போதிய களஞ்சிய வசதியின்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கையேற்கப்பட்ட தபால் பொதிகளில் 2 ஆயிரத்து 362 தபால் பொதிகள் கொழும்பிலிருந்து இரண்டு புகையிரதப் பெட்டிகள் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் கொழும்பில் கையேற்கப்பட்ட தபால் பொதிகளே இவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.குடாநாட்டுக்கான தபால் பொதிகளைப் பொறுத்த வரை கடந்த மாதம் 27 ஆம் திகதி சரக்குக் கப்பல் மூலம் ஒரு தொகுதி தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை கடந்த சனியன்று பயணிகள் சேவைக் கப்பல் மூலம் குடாநாட்டுக்கான வெளிநாட்டு, உள்நாட்டுக் கடிதங்கள் அடங்கியதான 56 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-1)

## 51 தேசியப் பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் வெற்றிடமாகவுள்ள 51 தேசியப் பாடசாலைகளின் அதிபர் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு தற்போது கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகளில் 12 தமிழ் மொழிமூலப் பாடசாலைகளும் 39 சிங்கள மொழிப் பாடசாலைகளும் உள்ளடக்கப்படுகின்றன.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை என்பவற்றைச் சேர்ந்தோர் இப்பதவிகளுக்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் டிசம்பர் 22 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ச)

## வடக்குக் கிழக்கு மாகாண சபையின் இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

வடக்குக் கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றில் உத்தியோகஸ்தர்களுக்கான இடமாற்றங்கள், நியமனங்கள், மீள் நியமனங்கள் உட்பட சகல ஸ்தாபன நடவடிக்கைகளையும் மறுஅறிவித்தல் தரப்படும்வரை இடைநிறுத்தம் செய்யுமாறு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் ஆண்டுகளுக்கான வருட இடமாற்றங்கள் யாவும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்கு மாகாணம் தனித்தனி மாகாணங்களாக உயர் நீதிமன்ற தீர்ப்பின் படி பிரிக்கப்பட்டுள்ளதால் எழுந்துள்ள நிர்வாக ரீதியான நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக சட்டமா அதிபரிடமிருந்து கிடைக்கப்பெற்ற பணிப்புரையையடுத்து இவ்வுத்தரவு பிறப்பிக்கப்படுவதாக ஆளுநர் சகல அமைச்சுக்களுக்கும் அறிவித்துள்ளார். (எ-5)

## அரசாங்கப் பாடசாலைகளில் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தற்போது காணப்படும் பௌதிக வளங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் வகையில் தேசிய மட்டத்திலான ஆய்வு நடவடிக்கை ஒன்றினை கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே தெரிவித்தார்.

பாடசாலைகளில் காணப்படும் பௌதிக வளங்களை மதிப்பீடு செய்து நீர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு வசதியாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் தரவு முகாமைத்துவ ஆய்வுக்கிளை இந்த நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக வலயக் கல்வி அலுவலகங்கள் மூலமாக நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் மதிப்பீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் காணப்படும் வகுப்பறை வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூடம், தளபாடங்கள், நூலக வசதி, மின்சாரம், நீர் விநியோகம், கழிவறை வசதிகள், விடுதி வசதிகள் உட்பட சகல பௌதிக வளங்கள் தொடர்பாகவும் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-1)

## அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதித் தீர்வை குறைப்பு

(கொழும்பு)

சில அத்தியாவசியப் பொருள்களுக்கு இறக்குமதி செய்வதற்கான தீர்வையைக் குறைப்பதற்கு நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் கோதுமை மாவின் இறக்குமதி தீர்வை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கருவாடு, மாசி, ரின் மீன், உருளைக்கிழங்கு, நெத்தலி, பயறு, செத்தல் மிளகாய், கடலை, பெரியவெங்காயம் போன்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கான தீர்வை குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை ஜனவரி 21 ஆம் திகதி மட்டுமே அமுல்படுத்தப்படும். பண்டிகைக் காலங்களில் அதிகரித்துச் செல்லுகின்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் நுகர்வோர்கள் முகம் கொடுக்கின்ற விலை அதிகரிப்பை சமாளிக்கும் பொருட்டே சில அத்தியாவசியப் பொருள்களுக்கான இறக்குமதி தீர்வையைக் குறைப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக நிதிஅமைச்சு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)


## சிறுவிளம்பரங்கள்

### திருமண சேவை

எங்களிடம் டாக்டர், எஞ்ஜினியர், எக்கவுண்டன், ஆசிரியர்கள், அரச , தனியார், சைவபோசனம், சுயதொழில், வர்த்தகர்கள், விவாகரத்துப் பெற்றவர்கள், வெளிநாட்டு, உள்நாட்டு மணமக்களின் ஜாதகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு *சிவாலயா சர்வதேச திருமண நிலையம்* இல.389, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.(பூங்கனிச் சோலைக்கு அருகாமையில்) உரிமையாளர்:- *S.K. சிவகரன்.* (691)

## அறிவித்தல்

### பிரியங்கா எலக்ரோனிக்ஸ்

எமது நிலையத்தில் பழுது பார்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்டு நீண்ட நாட்களாக மீட்டுக்கொள்ளாத பொருட்கள் அனைத்தையும் 10.01.2007 க்கு முன்னதாக உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

தவறும் பட்சத்தில் அப் பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத் தருகின்றோம்.

*உரிமையாளர்*
*பிரியங்கா எலக்ரோனிக்ஸ் ,*
*ம.ம.வி.வீதி, நெல்லியடி.*

C-555

ஒளி விளக்குகள் வைத்திருப்போர் மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக!

-பிளேட்டோ

வலம்புரி

# அமைதி நிலையை ஏற்படுத்த புத்திஜீவிகள் முன்வர வேண்டும்

இலங்கை இன விவகாரம் தொடுவானமாக நீண்டு செல்கின்றது. காலங்கள் கடந்து செல்கின்றனவே தவிர தீர்வுகள் எட்டப்படுவதாகவில்லை.

இதற்கான காரணந்தான் என்ன? இந்தக் கேள்வி பொதுமக்களின் மனங்களை பிழிகின்ற போதிலும் விடை கிடைக்கவில்லை.

சிறிய நாடான இலங்கையில் இருக்கக் கூடிய ஒரு சில இனங்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக வாழ முடியவில்லை.

மதம், மொழி என்பவற்றின் பேரால் நாட்டின் அதிகார உரிமை நிலைநிறுத்தப்படுகின்றது. இதன் காரணமாக சிறுபான்மையின மக்கள் ஆளும் வர்க்கத்தால் அடிமைப்படுத்தப்படுகின்றனர்.

உலக அறிவியல் வளர்ச்சியிலும் அடிமைத்தன சிந்தை விடைபெற்றுச் செல்லவில்லை. இதனால் சிறுபான்மையின மக்கள் தொகுதி பெரும்பான்மை இனத்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியது.

உலகின் அனுபவப் பாதையில் அடக்கப்பட்ட இனங்கள் தொடர்ந்து அடங்கிப் போனதாக வரலாறுகள் இல்லை.

அடக்கியவர்களுக்கு எதிராக அடங்கியவர்கள் கிளர்ந்தெழுந்த போது அதன் வலிமையைத் தடுத்து நிறுத்தும் வல்லமை ஆண்ட இனங்களுக்கு இருந்ததுமில்லை.

இங்குதான் சிறுபான்மையின மக்கள் உரிமைச் சுதந்திரத்தின் உரித்துக்கு உரியவர்களாகின்றனர். இந்த வகைமையே ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்கும் பொருத்துடையதாகும்.

உலக வரலாற்றில் இடம்பெற்ற போராட்டங்களுடன் ஒப்பிடும் போது இலங்கை இனவிவகாரம் வேறுபட்ட போக்கைக் கொண்டுள்ளதை அவதானிக்க முடியும்.

அதாவது எந்தவொரு நாடும் தனது அரசியல் எல்லைக்குள் நடக்கின்ற போராட்டத்துக்கு ஒரு தீர்வைக்காண மு[illegible]படும். இலங்கையில் அதுதான் இல்லை.

தீர்வைக் காண்பதற்காகப் பேச்சுவார்த்தை இடம்பெறும். ஆனால் தீர்வுத் திட்டம் இருக்க மாட்டாது. தீர்வில்லாமல்-எதனைக் கொடுக்கப் போகின்றோம் என்ற தெளிவான முடிபில்லாமல் காலங்கடத்துவதை மட்டுமே இலக்காகிக் கொண்டு இலங்கை அரசு இன விவகாரத்தை நகர்த்துகின்றது.

இவ்வாறு இலங்கை அரசு இன விவகாரத்தைக் கட்டிக்கழிப்பதன் பின்னணியில் வெளிநாடுகளின் ஆலோசனைகளும் அழுத்தங்களும் உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

குறிப்பாக இந்தியாவுக்கு எதிரான போக்குடைய நாடுகள் இலங்கைக்குத் தவறான வழிகாட்டுதல்களையே வழங்கி வருகின்றன.

அண்டை நாடான இந்தியாவின் ஆதிக்கம் இலங்கையில் இருப்பதைத் தடுப்பதும் இலங்கை மீது தம் ஆதிக்கம் செலுத்துவதன் ஊடாக இந்தியாவின் உப கண்ட வல்லாண்மையைக் குறைப்பதுமே அதன் நோக்கமாகும்.

இவ்விதம் வெளிநாடுகளின் போக்கினால் ஆற்றலையும் இலங்கை இன விவகாரத்தை முடிபுக்குக் கொண்டு வருவதாயின் நாட்டுப் புத்திஜீவிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து உபாயம் அமைக்க வேண்டும்.

# புலிகளுக்குச் சாதகமாக தயாரிக்கப்பட்ட நிபுணர் குழுவின் யோசனையை நீக்க வேண்டும்

## மாவீரர் தின உரையைச் சுட்டிக்காட்டி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களது தாக்குதல் நடவடிக்கைகளை நாளுக்கு நாள் விரிவுபடுத்திக் கொண்டே செல்கின்றனர். அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாதிகள் தங்களது பயங்கரவாதச் செயற்பாடுகளை நாளுக்கு நாள் விரிவுபடுத்திக் கொண்டு வருகின்றனர். சமாதானத்தில் உறுதியாகச் செயற்படுவதாகக் காட்டிக் கொண்டு மறுபுறத்தில் அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் படையினர் மீது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

அத் தாக்குதல் சம்பவங்களில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி சகலரும் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். இதனைத் தடுத்து நிறுத்திப் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டது போல தனி இராட்சியத்தை அமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். புலிகளின் அந்த நோக்கத்தைத்தடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாகப் புலிகள் அமைப்பை தடை செய்ய வேண்டும், தேசத் துரோகமான யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலக வேண்டும், இதற்கான நடவடிக்கையில் பொய்யுரைக்கின்ற நோர்வேத் தரப்பினரை வெளியேற்ற வேண்டும்.

சர்வகட்சி ஆலோசனைகள் தமிழ்ப் பிரிவினவாதிகளுக்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்பட்ட நிபுணர் குழுவின் யோசனைகளை அரசு கைவிட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. (ச-5)

# சேது சமுத்திரக் கால்வாய்த் திட்ட இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பம்

(சென்னை)

மன்னாருக்கும் பாக்கு நீரிணைக்கும் இடையில் அமைக்கப்படவிருக்கின்ற சேது சமுத்திரத் திட்டத்தின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. கடல் பிரதேசத்தில் 167 கிலோமீற்றர் நீளமுடையதாக அமைக்கப்படவிருக்கும் சேது கால்வாய்த் திட்டப் பணிகள் நான்கு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

சேது கால்வாய்த் திட்டத்தில் இரண்டாவது அகழ்வுப் பணிகளை இந்தியாவின் போக்குவரத்து அமைச்சர் ரீ.ஆர்.பாலு ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பணிகளின் முதற்கட்டமாக நாகப்பட்டினத்துக்கு அருகில் கோடிக்கரைப் பகுதியில் 54 கிலோமீற்றர் தூரம் கடலை ஆழப்படுத்தும் பணிகள் ஏற்கனவே ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

சேது கால்வாய் அகழ்வுப் பணிகள் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் நிறைவேற்றப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பாலு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழக மாநில அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் இன்னும் இரண்டு ஆண்டுகளில் இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

சேதுக் கால்வாய்த் திட்டத்தினால் கடலின் சுற்றுச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக கரையோர வலைப்பின்னல் அமைப்புக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இத்திட்டத்தை உடனடியாக நிறுத்தக் கோரி இந்த அமைப்பு தமிழகம் முழுவதும் இம்மாதம் 15 ஆம்திகதி ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-133)

# யாழ்.மக்களை வாட்டி வதைக்கும் சிக்கின்குனியா வைரஸ் காய்ச்சல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மக்கள் கடந்த நான்கு மாதங்களாக பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் தமது இருப்பை உறுதி செய்து வந்தாலும் சிக்கின்குனியா என்ற வைரஸ் காய்ச்சலுக்கு தாக்குப்பிடிக்காத நிலையில் அவதியுறுகின்றனர்.

இந்நோய் பீடிக்கப்பட்டு, குடாநாட்டில் இயங்குகின்ற மா[illegible]ன மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலைகளில் தினமும் 500ற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெறுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் மன்னார் மற்றும் வவுனியாவிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு வந்தவர்கள் மூலமாகவே இந்நோய் யாழ்.மாவட்டத்தில் மக்களுக்கு பரப்பப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டவர்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் கடுமையான காய்ச்சலுக்கு இலக்காவதுடன் எழுந்து நடக்க முடியாத வலியினால் படுக்கையில் கிடக்கும் அளவிற்கு இந்நோயின் தாக்கம் உள்ளது.

வீட்டிலுள்ள அங்கத்தவர் ஒருவருக்கு இந்நோய் வந்தால் குடும்பத்திலுள்ள ஏனைய உறுப்பினர்களுக்கும் பரவும். இதனால் குடும்பத்திலுள்ள அனைவரும் பெருஞ்சிரமத்துக்குள்ளாவதுடன் அவர்களின் நாளாந்த கடமைகள் பலவற்றையும் பாதிக்கின்றன.

குடாநாட்டில் இந்நோய்க்குட்படாதவர்கள் எவரும் இருக்க முடியாத அளவிற்கு இந்நோயின் தாக்கம் அனைவரையும் யாழ்ப்பாணத்தில் பாதிப்படைய வைத்துள்ளது.

மருந்தாகப் பனடோலையும் சில நோய் எதிர்ப்பு மருந்துகளும் அரசு மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் இந் நோயின் தாக்கம் குடாநாட்டு மக்களைப் பாதிப்படைய தொடங்கியதையடுத்து குடாநாட்டில் பனடோல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் அவைகளும் கறுப்புச் சந்தையில் பல மடங்கு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை இந்நோய் ஏற்படுபவர்கள் பானங்கள், இளநீர் அருந்த வேண்டுமென வைத்தியர்களால் ஆலோசனை கூறப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தில் சோடா 350 ரூபாவும் இளநீர் மருந்துக்கும் கிடையாத நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நியாயமான சம்பள உயர்வு பெற்றுத் தருமாறு ஜனாதிபதிக்கு 1000 தந்தி அனுப்பி வைப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு கோரி முன்னெடுத்துவரும் போராட்ட நடவடிக்கைகள் நேற்று 8வது நாளாகவும் தொடர்ந்தது.

ஆரம்பத்தில் மெதுவாக பணி செய்யும் போராட்டமாக ஆரம்பமான இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் வேலை நிறுத்தம், மறியல், போராட்டம், ஆர்ப்பாட்டப் பேரணி என்று நாளுக்கு நாள் உக்கிரமடைந்து செல்கின்றது.

மேலும் தொழிலாளர்களுக்கு 300 ரூபா சம்பள உயர்வினைப் பெற்றுத் தருமாறு கோரி பதுளை மாவட்டத் தோட்டப் பகுதிகளிலிருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆயிரம் தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

எத்தகைய தொழிற்சங்க அழுத்தங்களுமின்றி தொழிலாளர்கள் சுயமாகச் சிந்தித்துத் தாமாகவே முன்வந்து இத் தந்திகளை அனுப்பியுள்ளனர்.தெல்பத்தை , வேவஸ்சை , மடூல்சீமை, தெமோதரை ஆகிய தோட்டங்களின் அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் இத் தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

மற்றும் பூனாகலை, அம்பிட்டிக்கந்த , கிறோக், லியன்காவெல , தயாபெற்ற , செல்சி, ஊவாஹைலன்ஸ் ஆகிய தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் அமைதி ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டு பண்டாரவளை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து நேற்று முன்தினம் விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

மேலும் ஆலிஎலை பகுதியைச் சேர்ந்த டிக்வெல தோட்டத் தொழிலாளர்களும் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை மேற்கொண்டனர்.

இப்பேரணி டிக்வெல தோட்டத்திலிருந்து ஆலிஎலை நகருக்குள் பிரவேசித்தது. அங்கு மூன்று கொடும்பாவிகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

அந்த வகையில் இரத்தினபுரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்ளின் வேலை நிறுத்தப் போராட்டம் கடந்த மூன்று நாட்களாக ஆர்ப்பாட்டங்களாக மாறியுள்ளது. சம்பள உயர்வுக்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் தோல்வியடைந்து வருவதனால் தொழிலாளர்கள் தமது வேலை நிறுத்தத்தை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இவ் வேலை நிறுத்தம் காரணமாக தேயிலைக் கொழுந்துகள் ஒரு அடி உயரம்வரை வளர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பரீட்சையில் முறைகேடு

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை நேற்று முன்தினம் ஆரம்பமான நிலையில் பரீட்சை முறைகேடுகள் சில இடம்பெற்றுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக விசேட அதிகாரிகள் சிலரை ஈடுபடுத்தியுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுரஎதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முறைகேடுகள் தொடர்பாக தகவல்கள் வட மத்திய மாகாணத்திலிருந்து அறியக்கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ச-9)

# வெடிபொருட்கள் கொண்டு செல்ல அதிகாரிகள் அனுமதி அளித்தது எவ்வாறு?

## இராமதாஸ் கேள்வி

மத்திய அரசின் அனுமதி இன்றி கொழும்புக்கு வெடிபொருள்கள் கப்பலில் கொண்டு செல்ல தூத்துக்குடித் துறைமுகத்தில் இருந்த சுங்க அதிகாரிகள் அனுமதி தந்தது எப்படி என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் இராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் இராமதாஸ் இலங்கைக்கு வெடிபொருள்கள் கப்பலில் அனுப்பப்பட்டது குறித்து தங்களுக்கு எதுவுமே தெரியாது என்று அயலுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியிருப்பது ஆச்சரியமளிக்கிறது என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாக்பூரில் உள்ள எக்னா மிக் எக்ஸ்ப்லோசிவ் லிமிட்டட் என்னும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட அந்த வெடிபொருட்கள் கொழும்பில் உள்ள வெல்சாரா அம்யூனிஷன் கிடங்கிற்கு சோளார் எக்ஸ்புளோசிவ் நிறுவனத்தின் மூலம் தூத்துக்குடித்துறைமுகத்தின் வழியாக அனுப்பப்பட்டது என்ற தகவல் எனக்கு கிடைத்துள்ளது.

கொழும்புக்கு அனுப்பப்படவிருந்த வெடிபொருட்கள் மதுரையை அடுத்த வேலூரில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக விசாரணை நடத்த தமிழக முதலமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளதற்கு பாராட்டுக்கள்.

இலங்கைப் பிரச்சினைக்கும் தி.மு.க.ஆட்சியின் நிலைத் தன்மைக்கும் எந்தத்தொடர்பும் இல்லை. தி.மு.க.கட்சி ஐந்தாண்டு காலம் நீடிப்பதற்கு ஆதரவளிப்போம் என்று நாம் தெளிவாக உறுதியளித்துள்ளோம். (ச)

# மூதூர் தாக்குதலில் கொல்லப்பட்ட 50 பேரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

மூதூர் பிரதேசத்தில் அண்மையில் நடந்த யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சனியன்று மூதூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இங்கு கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட 50 பேருக்குரிய நஷ்ட ஈட்டுத் தொகை 75 ஆயிரம் ரூபா வீதம் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது.

இதில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 37 ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வழங்கப்பட்டதாக பிரதேச செயலாளர் எம்.சி.எம்.சரீப் தெரிவித்தார்.

அத்தோடு காயப்பட்டவர்கள் 60 பேருக்கான காசோலைகளும் இங்கு வழங்கப்பட்டன. மற்றும் 20 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் வரை சேதம் ஏற்பட்டதென மதிக்கப்பட்ட வீட்டுரிமையாளர்கள் 62 பேருக்கும் 10 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையிலான சேதம் ஏற்பட்டவர்களுக்குமான கொடுப்பனவுகள் 252 பேருக்கும் என காசோலைகளும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன என பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

எனவே 10 ஆயிரம் ரூபாவுக்கு கீழ் சேதம் ஏற்பட்டதாக மதிக்கப்பட்ட 515 வீட்டுரிமையாளர்களுக்கான கொடுப்பனவுகள் வீடமைப்பு அதிகார சபையினூடாக வழங்கப்பட்டன. ஏனைய கொடுப்பனவுகள் மீள் குடியேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்ட மதிப்பீட்டின்படி இச்சம்பவத்தில் 286 வீடுகள் முற்றாகவும் பகுதியாக 1425 வீடுகளும் சேதமானதாக வீடமைப்பு அதிகார சபை தொழில்நுட்ட அதிகாரி நற்குணம் தெரிவித்தார். (ச)

# பாதை தடைப்பட்டுள்ளமைதான் பிரச்சினை என்கிறார்கள் புலிகள்

வாகரையில் உள்ள நிலைவரம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் குற்றச்சாட்டு தவறான கருத்தெனதான் கூற முடியும்.

கடந்த மாதம் 11 ஆம் திகதி வரை வாகரைப் பகுதியில் மக்கள் அங்கிருந்து வெளியேறிச்சென்று வரவழியிருந்தது எனவும் அதன் பிறகு அந்தப் பாதை மூடப்பட்டது எனவும் அதன் காரணமாக அப் பகுதி மக்கள் போக்கு வரத்துப் பாதை இல்லாத நிலையில்தான் இருக்கின்றார்கள் எனவும் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் உள்ள ஒரே ஒரு பாதை பனிச்சங்கேணி ஊடாக செல்லும் பாதைதான் எனவும் அங்கு தொடராக போக்குவரத்தை இலங்கை இராணுவம் தடை செய்து வந்துள்ளது எனவும் ஆதனால்தான் பொதுமக்கள் வெளியேற முடியாத நிலையில் உள்ளதாக அவர் கூறினார்.

போக்குவரத்து தடைப்பட்டுள்ள நிலையிலும் தங்கள் மீது குற்றங்கூறுவது வருத்தமளிக்கக்கூடியது என்றும் கூறிய அவர் மக்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு போக நடைமுறை ஒழுங்குகளும், தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேற தற்போது சில ஒழுங்கு நடைமுறைகள் உள்ளன என்றும் அதன் அடிப்படையில் வெளியேற விரும்பும் மக்களுக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (எ-1)

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய அலுவலகத்தில் திருட்டு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் மற்றும் தபால் நிலையம் என்பவற்றில் நேற்று அதிகாலை துணிகரத்திருட்டு இடம் பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஆலய நிதி அலுவலகத்தினுள் சீற்றை உடைத்து உள்ளிறங்கிய திருடர்கள் அலுவலகத்தினுள் இருந்த தேங்காய் எண்ணெய், தேங்காய் மற்றும் சில பொருட்கள் உட்பட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தபாலகத்தினுள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த மின் விசிறியை எடுத்துச் சென்றுள்ளனர்.

பெறுமதியான பொருட்கள் இரும்புப் பெட்டியினுள் பூட்டப்பட்டிருந்தமையால் எதனையும் திருடர்கள் எடுத்துச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச)

# அரசு-விடுதலைப்புலிகளே வாகரை நிலைமைக்கு காரணம்

## கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் வாகரையில் தற்போது ஏற்பட்டுள்ள இடர்பாடுகளுக்கு இரு தரப்புமே காரணம் என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் பேசவல்ல அதிகாரியான தொர்பினூர் ஓமர்சன் தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து தாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகவும் இந்த வன்முறைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தையே பேராபத்தான நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளதெனவும் தெரிவித்தார்.

உள் நாட்டிலேயே இடம் பெயர்ந்து வாகரைப் பகுதியில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் வாழ்க்கையும் ஆபத்துக்குள்ளாகியுள்ளதெனவும் அவர் கூறியுள்ளார்.

வாகரைப் பகுதியில் உள்ள மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் அவர்களை பாதுகாக்க விடுதலைப்புலிகள் தவறி விட்டனர் என்றும் அந்தப் பகுதியில் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வழிவகை செய்து கொடுப்பது விடுதலைப்புலிகளின் கடமை எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் உள்ள நிலைமைகளை நேரில் கண்டறிய தமது குழுவினர் விரும்பிய போதும் பாதுகாப்புக் காரணங்களை சுட்டிக்காட்டி தங்களுக்கு அங்கு செல்ல இலங்கை இராணுவம் அனுமதி வழங்கவில்லை என்றும் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தங்களுக்கு இலங்கை இராணுவம் அனுமதி வழங்காததே போர் நிறுத்த ஒப்பந்த மீறல் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சர்வதேச சட்ட விதிகளின்படி பொதுமக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இரு தரப்பினரும் ஈடுபடவேண்டாம் என்றும் போர்நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பினரும் மதித்து நடக்க வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

### பொலிஸ்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இனந்தெரியாத இருவர் அலுவலகத்தினுள் நுழைந்து இத் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-9,133)

### மட்டு....

மூன்று நாட்களாக மக்கள் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர். வாகரை மருத்துவமனையில் தஞ்சமடைந்துள்ள இவர்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்திராவி டில் பாரிய உயிரிழப்புக்களை சந்தித்திருக்க வேண்டியிருக்கும் என்று வாகரை மருத்துவ மனை தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

### யாழ்.குடாநாட்டுக்கும்...

விடுத்திருந்தன.

எனவே சர்வதேச நாடுகளின் ஆலோசனைக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும். வாகரைப் பகுதியில் பட்டினி நிலவுகின்ற அதேவேளை ஷெல் தாக்குதலினால் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அங்கு மருந்துப் பொருட்கள் இல்லை. எனவே தான் அங்கு மருந்துப் பொருட்கள் அனுப்பிவைப்பதுடன் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் வாகரைக்குச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்றார் அவர். (ச)

### பொதுமக்கள் மீதான...

இலங்கையில் மீண்டும் தீவிரமடைந்துள்ள உள்நாட்டுப் போரில் இந்த ஆண்டில் மட்டும் ஏறக்குறைய 1200க்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

மேலும் கிழக்கில் தொடரும் தாக்குதலால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இடம் பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது எனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கூறியுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை முதல் இராணுவம் நடத்தி வரும் கடும் தாக்குதலால் பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில் பொதுமக்களை கவசமாக விடுதலைப்புலிகள் பயன்படுத்துகின்றனர் என இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

கிட்டத்தட்ட 30 ஆயிரம் முதல் 35 ஆயிரம் வரை இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் வாகரையில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கின்றனர். 3 ஆயிரத்திற்கும் அதிகமான சிங்கள மக்கள் அரசாங்கத்தின் வசமுள்ள பகுதியில் வசிக்கிறார்கள்.

வாகரை மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் அடிப்படை உரிமைகளே நசுக்கப்பட்டுள்ளன என்று இடைக்கால ஐ.நா.பிரதிநிதியும் மனித உரிமை ஒருங்கிணைப்பாளருமான அமின் ஆவட் கூறியுள்ளார்.

பொதுமக்கள் வசிப்பிடங்களில் நேரடியாகத் தாக்குதல்களை நடத்துவது அதிகார துஷ்பிரயோகமாகும்.

இராணுவச் செயற்பாடுகளுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் தடை எதுவும் இல்லாமல் சுதந்திரமாக நடமாடுவதற்குப் பொதுமக்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. (ச-5)


**Patrician Institutes**

பற்றீசியன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

சான்றிதழ் வழங்கும் வைபவம் பிற்போடுதல் பற்றிய அறிவித்தல்

எதிர்வரும் 14.12.2006 அன்று நடைபெற இருந்த சான்றிதழ் வழங்கும் வைபவம் தவிர்க்க முடியாத காரணத்தினால் *பிற்போடப்பட்டுள்ளது* என்பதை சகல மாணவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

சான்றிதழ் வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*மேலதிக விபரங்களுக்கு,*

*பதிவாளர்,*

*59,ST.Patrick's Road,*

*Jaffna.*

(C-556)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட். யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.